**<u>சிறப்பு சார்பு நீதிமன்றம், (மோட்டார் வாகன விபத்து இழப்பீடு தீர்ப்பாயம்)</u>**
**<u>திருப்பத்தூர், திருப்பத்தூர் மாவட்டம்</u>**
**<u>MCOP . No.167/2025</u>**

ம.சா.2 துரைராஜ் த/பெ முனிசாமி நாள் : 27.07.2026

**<u>4 ஆம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

விபத்து குறித்து நான் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தேனா என்றால் இல்லை. நான் இறந்த இந்துராணியை மருத்துவமனைக்கு அழைத்து சென்ற போது போலீசார் என்னை விசாரித்தார்கள். இந்துராணி ஆட்டோவில் சென்ற போது எதிரில் வந்த டிராக்டர் வேகமாக வந்து ஆட்டோ மீது மோதிவிட்டது. இந்த விபத்து வாணியம்பாடி – கிருஷ்ணகிரி தேசிய நெடுஞ்சாலையின் சார்வீஸ் சாலையில் ஏற்பட்டது. ஆட்டோவை ஓட்டி வந்தவர் நிதானமாக வந்தார் என்றால் சரிதான். அதை நான் நேரில் பார்த்தேன். இந்த விபத்திற்கு டிராக்டர் ஓட்டுநரின் அஜாக்கிரதை தான் காரணம் என்றால் சரிதான். ஆட்டோ ஓட்டுநரின் அஜாக்கிரதையால் விபத்து ஏற்படவில்லை என்றால் சரிதான்.

சாட்சி விசாரணை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைகள் திருத்தப்பட்டு சரிபார்க்கப்பட்டு, சாட்சியிடம் கொடுத்து அவர் படித்து பார்த்து சரி கையொப்பம் செய்தார்.

ஒம்/.S.மைதிலி,
சிறப்பு சார்பு நீதிபதி,
திருப்பத்தூர்.